பக்கங்கள்: எட்டு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு2028 கார்த்திகை16 திங்கட்கிழமை 01-12-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர்04

# பொன்னாலைப் பாலம் இன்று திறந்துவைப்பு!

யாழ்ப்பாணம், டிச. 1

காரைநகர் பொன்னாலைப் பாலம் இன்று காலை 10.00 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடபகுதி கடற்படையினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இந்தப் பாலத்தை திறந்து போக்குவரத்தை விரைவில் ஆரம்பிக்குமாறு அமைச்சர் பெரிசியிடமும், வடபகுதி இராணுவ மற்றும் கடற்படைத் தளபதிகளிடமும் ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கோரியதை அடுத்தே பாலம் மக்கள் போக்குவரத்துக்காகத் திறக்கப்படுவதாக ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று பாலம் திறக்கப்பட்டதும் அவ்வழியாக முதலில் பஸ்சேவை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

காரைநகர் டிப்போவுக்குச் சொந்தமான பஸ் ஒன்றில் பயணிகள் கடற்படைப் பாதுகாப்புடன் காரைநகரில் இருந்து பொன்னாலைச் சந்தி வரை அழைத்துவரப்படுவர் என்றும்—

யாழ். நகரில் இருந்து மூளாய் வரை சேவையில் ஈடுபடும் பஸ் பொன்னாலைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரூ. 4 நாணயக்குற்றி மூலம் வெளியூருடன் தொடர்பு!

### நேற்றுச் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 1

நாணயக்குற்றிகளைப் போட்டு தொலைபேசி இணைப்புப் பெறும் நிலையங்கள் யாழ். நகரில் இன்று முதல் அமைக்கப்படவிருக்கின்றன.

முதலாவது நிலையம் நேற்று பண்ணை தொலைத்தொடர்பு நிலையத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த வைபவத்தில் யாழ். நகர இராணுவ கமாண்டரும், யாழ். நல்லூர் பிரதேச செயலர் பிரிவு இணைப்பாளருமான பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ், ரெலிக்கொம் நிறுவன பிரதிப் பொது முகாமையாளர் எஸ். கனகசூரியர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தச் செய்திகள் மீண்டும் தணிக்கை செய்யப்படலாம்!

## அரசு ஆலோசிக்கிறது

கொழும்பு, டிசம்பர் 1

யுத்தம் தொடர்பான செய்திகளுக்கு விரைவில் தணிக்கை கொண்டுவருவது தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய சமயம் செய்தித் தணிக்கை அமுல் செய்யப்பட்டதாகவும்—

படையினரின் செயற்பாடுகள் பற்றி செய்திகள் வெளிவராததால் வெற்றிகரமாக யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதாகவும் — பாதுகாப்பு வட்டாரங்களில் கருத்து நிலவுகிறதாம்,

அதுவும் யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்திருப்பதாக அரசு கருதுவதால் செய்தித் தணிக்கை அவசியம் என பாதுகாப்பு வட்டாரங்களில் கருதப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரை தரைப்பாதையைத் திறப்பதற்காக கடந்த மே மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை மூன்றாவது, இறுதிக்கட்டத்தை அடைந்திருப்பது தெரிந்ததே. (இ-3)

## தியேட்டர்கள் சுற்றிவளைப்பு

கொழும்பு, டிச. 1

கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியில் உள்ள தியேட்டர்கள் பொலீஸாரால் நேற்று மாலை சுற்றிவளைக்கப்பட்டது.

படம் நடந்து கொண்டிருந்த சமயம் தியேட்டர்களுக்குள் சென்ற பொலீஸார் அங்கு படம் பார்த்துக்கொண்டிருந்த இளம் வயதினரின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப நாணயக் குற்றிகளுக்கு கிராக்கி ஏற்படப் போகுது எண்டு சொல்லுங்கோ.....!

## இந்தியப் பத்திரிகையாளர் பொலீஸாரால் விசாரிப்பு

### புகைப்படங்கள் பறிமுதல்

கொழும்பு, டிச. 1

இந்தியாவின் முன்னணிப் பத்திரிகையாளர்களில் ஒருவரான சுதா இராமச்சந்திரன் கொழும்பில் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டார்.

கொழும்பு தாஜ் டிலக்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்த அவரின் அறைக்குள் பொலீஸார் நுழைந்து அவருடன் கடுமையாக நடந்து கொண்டனர் என்றும்—

அவர் வடக்கு — கிழக்குக்கு விஜயம் செய்தபோது எடுத்த படங்களை பறிமுதல் செய்தனர் என்றும் — தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 9 பேர் கைது

மட்டக்களப்பு, டிச. 1

மட்டக்களப்பு புறநகர்ப் பகுதியான இருதயபுரத்தில் நேற்று 9 இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர். (இ-21)

## கதிர்காமத்தில் 80 தமிழர் கைது!

கொழும்பு, டிச. 1

கதிர்காமத்தில் உள்ள இரு கிராமங்களில் நேற்று நடத்தப்பட்ட தேடுதலின் போது 80 தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 6 ஆண்களும், ஒரு பெண்ணும் மேல் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வள்ளிமாதாகம, பெரகிரிகம ஆகிய கிராமங்களிலேயே தேடுதல் நடத்தப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டோரில் பண்டாரவளை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் இருந்து வந்தவர்களும் அடங்கி உள்ளனர்.

கைது செய்யப்பட்ட பலர் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கனகராயன் குளத்துக்கு வடக்கே மோதல்!

கொழும்பு, டிச. 1

கனகராயன் குளத்துக்கு வடக்கே பெரியகுளத்தில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் மோதல் இடம் பெற்றது. சிறிய ஆயுதங்கள் சகிதம் நடந்த இந்த மோதலில் புலி உறுப்பினர் ஒருவரின் சடலமும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஸ்ரேடியம் புனரமைப்பு வேலை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ். துரையப்பா ஸ்ரேடியத்தைப் புனரமைக்கும் பணி இன்று காலை அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கிறது.

இந்த ஸ்ரேடியத்தைப் புனரமைக்கும் பணிக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க 10 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

துரையப்பா ஸ்ரேடியத்தை புனரமைக்கும் பணி குறித்த மதிப்பீட்டை யாழ். மாநகர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதியை சேர்ந்த இருவர் கைது!

கொழும்பு, டிச. 1

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாகச் சந்தேகத்தின் பேரில் நீர் கொழும்பில் இருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தியாகராஜா லோகராஜா- பலாலி, கே. வரப்பிரகாஷம்- யாழ்ப்பாணம் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் எனத்தெரிவிக்கப்படுகின்றது. (இ-21)

# வவுனியாவில் பொலீஸ் துப்பாக்கி சூடு சிறுவன் பலி; 2 மாணவர்கள் காயம்!!

வவுனியா, டிச. 1

வவுனியாவில் நேற்று மாலை பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் 4 வயதுச் சிறுவன் உயிரிழந்தான். இரு மாணவர்கள் காயமடைந்தனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

வவுனியா, வைரவப்புளியங்குளத்தில் உள்ள மாடசாமி கோயிலுக்குப் பின்புறமாகத் திடீரென வந்த பொலீஸார் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்பகுதியில் உள்ள வீடியோ கடை ஒன்றை பொலீஸார் சோதனை செய்த சமயம், அங்கு நின்ற ஒருவரிடம் வதிவிடப் பாஸைக் காட்டுமாறு பொலீஸார் கேட்டனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகாலட்சுமி தியாகராஜா

காரைநகர் அறுகம்புலத்தைச் சேர்ந்த திருமதி மகாலட்சுமிதியாகராஜா 29-11-97இல் நாவலப்பிட்டியில் காலமானார்.

அன்னார் தியாகராஜாவின் (முன்னாள் ஆசிரியர், யாழ்ற்றன் கல்லூரி) அன்பு மனைவியும், மாலினி (ஆசிரியை, கதிரேசன் கல்லூரி, நாவலப்பிட்டி), ஜெயந்தி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், செந்தில்நாதனின் (கனடா) அன்பு மாமியும், பிருந்தாவின் (கனடா) அம்மம்மாவும்; காலஞ்சென்றவர்களான கனகசபை (O. A) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (கிளாக்கர்) தம்பதிகளின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-11-97 ஞாயிற்றுக்கிழமை நாலப்பிட்டியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. குலநாயகம்
(சிறியதகப்பன்)

களபூமி,
காரைநகர்.
(51501)

## இராசதுரை மகாலிங்கம்

(இளைப்பாறிய ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட இ. மகாலிங்கம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சுரேன்குமார் (கொழும்பு), பாமா (சுவிஸ்), கலைச்செல்வன் (ஜேர்மனி), வசந்தகுமார் (ஜேர்மனி), கவிதா (கண்டி), பாமினி, சங்கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கந்தையா, சுப்பிரமணியம், தர்மரட்ணம், சண்முகலிங்கம், காலஞ்சென்ற முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாபுவின் (சுவிஸ்) மாமனாரும், சியானின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று(1-12-97)திங்கட்கிழமை 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(51509)

## கணபதிப்பிள்ளை சிவசம்பு

(பிரபல வெற்றிலை வியாபாரி)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டவரும் நாகம்மாவின் அன்புக்கணவருமான கணபதிப்பிள்ளை சிவசம்பு 30.11.97 இல் காலமாகி விட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (01.12.97) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
க. சிவலிங்கம்,
(மருமகன்)

ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்பாக,
கந்தரோடை,
சுன்னாகம்.
[51503]

## திருமதி சின்னத்தங்கச்சி அண்ணாமலை

சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி சின்னத்தங்கச்சி அண்ணாமலை (ஊர்மணியரின் மகள்)30-11-97 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் திரு. அண்ணாமலை (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர், மலேசியா) அவர்களின் அன்பு மனைவியும், மார்க்கண்டர் (இளைப்பாறிய விகிதர், யாழ். அரசினர் வைத்தியசாலை), Dr. செல்வராஜா (கண்டி), திருமதி கமலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் பத்மாவதி, அமரர் தருமநாயகி, திரு. சுந்தரராஜா (இளைப்பாறிய மாவட்ட தொலைத் தொடர்பு அதிகாரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி இந்திரா உதயசூரியன் (வலி. மேற்கு பிரதேசசபை, வட்டுக்கோட்டை), திருமதி பாமா கணேந்திரகுமாரன் (அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), தயா (பிரதேச செயலகம், சங்கானை), திருமதி நந்தினி காங்கேயன் (U K.), சாந்தினி (பேராதனைப் பல்கலைக்கழகம்), கலாநிதி தேவானந்தர் (அமெரிக்கா), நேசானந்தர் (கனடா), சர்வானந்தர் (ரஷ்யா), பிரம்மானந்தர் (யாழ்ப்பாணக் கல்லூரி), பவானி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரசன்னா, கிரிசாந்தன், நிவேதா, வித்யா, திவ்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-11-97 ஞாயிறு அன்று சித்தன்கேணியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. மார்க்கண்டர்
(மகன்)

கமலவாசா,
சித்தன்கேணி,
(51496)

## வீடுகள் அமைக்க செஞ்சிலுவை உதவி

சண்டிலிப்பாய், டிச. 1

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வீடுகளை முற்றாக இழந்த 21 குடும்பங்களுக்கு இலவசமாக வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கு இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையின் சண்டிலிப்பாய் பிரிவு முன் வந்துள்ளது.

இத்துடன் பத்து மலசல கூடங்களும் நிறுவிக் கொடுக்கப்படவுள்ளன. இது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பணிமனையில் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நேற்று நடைபெற இருந்தது.

(ஐ-135)

## அளவெட்டியில் நூலகம்

மல்லாகம், டிச. 1

வலி வடக்கு பிரதேச சபை மல்லாகம், அளவெட்டி உப அலுவலக நூல் நிலையம் மீண்டும் அளவெட்டியில் இயங்கவுள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இந் நூல் நிலையம் மல்லாகம் சந்திக்கு அண்மையில் வலி வடக்கு பிரதேச சபையுடன் சேர்ந்து இயங்கி வந்தது.

ஆனால் அளவெட்டியில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியதை அடுத்து இந் நூலகம் அடுத்தமாதம் முதல் மீண்டும் அளவெட்டியில் இயங்கவுள்ளது.

(ஐ-86)

## கோழி வளர்க்க கடன் உதவி

ஊற்று நிறுவனத்தின் அனுசரணையுடன் நாகர்கோவில் தெற்கு தற்சார்பு வளர்ச்சிக்கழகம் கழக அங்கத்தவர்களுக்கு கோழி வளர்ப்புக்கான கடன் உதவியை வழங்கி வருகின்றது.

(ஐ-ரீ)

## பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்

கோப்பாய் பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள 13 பாடசாலைகளுக்கு நாளை மறுதினம் புதன்கிழமை விளையாட்டு உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும்.

கரம்போட், கரபந்து, பட்மின்ரன், கிறிக்கெற் மட்டை, டாம்போட் ஆகிய பொருள்கள் இவற்றில் அடங்கும்.

பாடசாலைகளின் சார்பில் அவற்றின் அதிபர்கள் இவற்றைப் பெற்றுக் கொள்வர்.

(ஐ-154)

## மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை

செம்பியன்பற்று, டிச. 1

மருதங்கேணி கிராம வைத்திய அதிகாரியால் செம்பியன்பற்று அ. த. க. பாடசாலையில் மாணவர்களுக்கு அண்மையில் மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டு மருந்துகளும் வழங்கப்பட்டன.

இப்பகுதியில் பாதுகாப்பு அரணுக்கு வெளியே அம்பன் மத்திய மருந்தகம் மட்டுமே இயங்குகிறது. (ஐ-36)

## பங்குத்தந்தை நியமிப்பு

சாவகச்சேரி, டிச. 1

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலய பங்குத் தந்தையாகப் பணிபுரிந்த அருட்திரு. பற்றிக் ஞானப்பிரகாசம் ஓய்வுபெறுவதையிட்டு இந்த ஆலயத்திற்குப் புதிய பங்குத்தந்தையாக அருட்திரு. நேசநாயகம் அடிகள் இன்று முதலாம் திகதி தொடக்கம் பணிபுரியவுள்ளார்.

(ஐ-81)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
அதிர்ஷ்டலாபச்சீட்டு

மேற்படி அதிர்ஷ்டலாபச்சீட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (7—12—97)பிற்பகல் 3 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருப்பதால் தங்களிடமுள்ள சீட்டு அடிக்கட்டைகளை எதிர்வரும் (4-12-97) வியாழக்கிழமைக்கு முன்பு கல்லூரியில் ஒப்படைக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

- செயலாளர்

(சி/2220)

நீண்ட காலம் எதிர்பார்க்கப்பட்டது!

VELAUTHAM'S
- VECTORS IN PRACTICE -
(IN TAMIL)
காவிகளின் செயற்பாடு
(தமிழில்)
ஆக்கம்: பொ. வேலாயுதம்
(வெக்ரர்) B. Sc.

- G. C. E. உயர்தர, பல்கலைக்கழக மாணவர்க்குரிய தரமான நூல்
- With 125 Worked Examples
  பக்கங்கள்: 379 — விலை ரூபா 295/-
- சொற்ப பிரதிகளே விற்பனைக்குண்டு! பிரதிகளுக்கு முந்துங்கள்!!

கிடைக்குமிடம்:
NEW SCIENCE HALL, JAFFNA.
MODERN EDUCATION CENTRE,
KARAVEDDI,
[51505]

## எமது இதய அஞ்சலி

எமது பங்கின் முதற்குருமணி
அருட்தந்தை போல்நட்சத்திரம் அ.ம.தி.
அடிகளாரின் அன்புத்தாயார்

### திருமதி நேசம்மா மரியாம்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது துணைவர் அருட்தந்தை அவர்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த செபத்துடன் கூடிய அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பங்குமக்களும், பங்குத்தந்தையும்.
புனித மிக்கேல் ஆலயம்
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(51504)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்லையா ஆனந்தராஜா

மண்ணில்; 19 — 02 — 1934
விண்ணில்: 31 — 10 — 1997

இயேசு சொன்னார்:
"என்னை விசுவாசிப்பவன்
மரித்தாலும் பிழைப்பான்"
யோவான் — 11: 25.

இன்று 1 — 12 — 1997 திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் நினைவு ஆராதனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

லோட்டன் வீதி,
மானிப்பாய்.
(சி/ 2218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் - ஜனாதிபதி மோதல் பாகிஸ்தானில் வலுக்கிறது

இஸ்லாமாபாத், டிச. 1

பாகிஸ்தானில் நீதித்துறைக்கும், பிரதமருக்கும் இடையே ஏற்பட்ட நெருக்கடி மேலும் தீவிரமடைந்து பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான மோதலாக உருவெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்லாமாபாத்தில் உள்ள உயர் நீதிமன்றக் கட்டடத்துக்கும், உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு இராணுவத்துக்கு பணிப்புரை விடுக்குமாறு பிரதமர் நவாஸ் ஷெரீப்பிற்கு ஜனாதிபதி பாரூக்லெஹாரி ஆலோசனை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த வெள்ளியன்று பிரதமர் ஷெரீப்பின் ஆதரவாளர்கள் அடங்கிய கும்பல் ஒன்று உயர்நீதிமன்றக் கட்டடத்துக்குள் அத்து மீறிப் புகுந்து ஆர்ப்பாட்டம் நடத்தியதும் —

அதனால் அங்கு நடைபெறவிருந்த பிரதமர் நவாஸ் ஷெரீப் மீதான நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கு விசாரணை திடீரென ஒத்திவைக்கப்பட்டமையும் தெரிந்ததே.

இச் சம்பவத்தை சுட்டிக்காட்டி உயர் நீதிமன்றத்துக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி லெஹாரி கேட்டிருக்கிறார்.

''வருத்தம் தரும் நிர்வாகக் குறைபாட்டிற்கு இச் சம்பவத்தை விடப் பெரிய ஆதாரம் இருக்க முடியாது'' என்று ஜனாதிபதி தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் கீழ் செயற்படும் படைகளை நம்பமுடியாததால் தமக்கு இராணுவப் பாதுகாப்பு தேவை என்று கேட்டு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஒருவர் ஏற்கனவே ஜனாதிபதி லெஹாரிக்கு கடிதம் எழுதியிருந்தார், அவரின் அந்தக் கடிதத்துக்கு ஜனாதிபதி பதில் அனுப்பியுள்ளார்.

**உலக அரங்கில்**

தலைமை நீதிபதியை பதவியில் இருந்து நீக்க சில உயர் நீதிமன்ற நீதிபதிகள் தீர்மானித்திருப்பதை கடிதத்தில் சுட்டிக்காட்டிய தலைமை நீதிபதி நீதிபதிகள் மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கக்கூடிய அதி உயர் அதிகாரம் கொண்ட நீதித்துறை உயர் ஆணைக் குழுவை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

அவரது கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார்.

தலைமைநீதிபதியின் நிலை குறித்து ஆராய்வதற்காக உயர் நீதிமன்ற நீதிபதிகளை ஒன்று கூடுமாறு நீதிபதி ஒருவர் கடந்த வெள்ளியன்று பிறப்பித்த நிர்வாகக் கட்டளை செல்லுபடியற்றது என்றும். அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி லெஹாரி கோரியுள்ளார்.

நீதித்துறைக்கும் பிரதமருக்கும் இடையிலான நெருக்கடியில் ஜனாதிபதி தலையிட்டிருப்பது பாகிஸ்தானின் அரசமைப்பு நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

இந்த நெருக்கடி தீவிரமடைந்து பிரதமர் ஒரு பக்கமும் ஜனாதிபதி மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதி ஆகிய இருவரும் மறுபக்கமுமாக நின்று நேரடியாக மோதும் நிலையை உருவாக்கியிருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

# மகாராணி எலிசபெத்தை கல் எறிந்து கொல்க!

## லிபிய செய்தி நிறுவனம் கூறுகிறது

திரிப்போலி, டிச. 1

இளவரசி டயானாவின் படுகொலைக்காக அவரது மாமியாரான எலிசபெத் மகாராணி கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்று லிபியாவின் அதிகாரபூர்வ செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

டயானாவின் மரணம் ஏற்படுத்திய துயர் இன்னும் நீங்காத நிலையில் மகாராணி தனது 50 ஆண்டு திருமண விழாவைக் கொண்டாடியதை லிபிய செய்தி நிறுவனம் கண்டித்தது.

டயானாவின் மரணத்துக்கு அரச குடும்பமே காரணம் என்றும், அது ஒரு திட்டமிடப்பட்ட கொலை என்றும் அச் செய்தி நிறுவனம் மீண்டும்குற்றஞ் சாட்டியுள்ளது.

(ஐ)

# ஏவுகணை நிபுணருக்கு 'பாரத ரத்னா' விருது

புதுடில்லி, நவ. 1

இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் அறிவியல் ஆலோசகரும் புகழ் பெற்ற ஏவுகணை அறிவியல்துறை நிபுணருமான டாக்டர் அப்துல் கலாமுக்கு இந்தியாவின் அதி உயர் தேசிய விருதான ''பாரதரத்னா'' விருது வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தைச் சேர்ந்த ''டாக்டர் அப்துல் கலாம் இந்தியாவின் பாதுகாப்பு அறிவியல் துறைக்கு ஆற்றி வரும் பங்களிப்பை தமிழக முதல்வர் மு. கருணாநிதியும், மத்திய பாதுகாப்பு அமைச்சர் முலாயம் சிங் யாதவும் பாராட்டியுள்ளனர்.

இந்தியாவின் ஏவுகணைத் திட்டப் பணிகளை எந்த ஒரு நாடும் தடுக்கவோ தாமதிக்கவோ முடியாது என்று ஏவுகணைத்திட்டத்தின் தலைவருமான அப்துல் காலம் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(ஐ)

# தமிழர் மீதான உரிமை மீறல் கட்டுக்கடங்காது தொடர்கின்றது

## அரசியல் தஞ்ச வழக்கில் லண்டன் நீதிமன்றம் தீர்ப்பு

லண்டன், டிச 01

இலங்கையில் ஈழத்தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்கின்றன. அவர்கள் மீது கொடூரமான சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நிலையில் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியவரை இலங்கைக்கு அனுப்புவது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்

அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட ஈழத்தமிழர் ஒருவர் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு வழக்கில் தீர்ப்பு வழங்கிய லண்டன் நீதிமன்றம் ஒன்றின் நீதிபதி டாக்டர் ஈ. ஏ. பிரின்ஸ் முன்கண்டவாறு தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு பிரிட்டனுக்கு வந்து அரசியல் புகலிடம் கோரிய கிழக்கு மாகாணம், கல்முனையைச் சேர்ந்த கோணேஸ் என்ற 22 வயது தமிழ் இளைஞர் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு வழக்கிலேயே மேற்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டு அரசியல் புகலிடம் கோரிய கோணேஸின் விண்ணப்பம் அந்த ஆண்டே நிராகரிக்கப்பட்டது. இதனையடுத்து உள்நாட்டு அமைச்சரின் நிராகரிப்பு உத்தரவுக்கு எதிராக அந்த இளைஞருக்காக சட்டத்தரணிகள் மேன் முறையீடு செய்தனர். இந்த மேன் முறையீட்டு வழக்கில் அந்தஇளைஞருக்கு ஆதரவாக பிரபல பரிஸ்டர் மைக்கல் மேவி ஆஜரானார்.

மேன்முறையீட்டை விசாரித்த பிரின்ஸ் தனது தீர்ப்பில் பின்வருமாறு தெரிவித்தார்.

இலங்கை ஆயுதப்படையினர் விடுதலைப்புலிகளுடனான போரை முடுக்கி விட்டதன் மூலம் ஆயுதப்படையினரின் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்கின்றன. தமிழர் மீதான சித்திரவதை கொடூரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் ஆயுதப் படையினர் தமிழ் மக்களை சட்டவரம்பிற்கு அப்பாற்பட்ட ரீதியில் படுகொலை செய்து வருகின்றனர்.

கைதாகி ஆயுதப்படையினரின் பிடியிலிருந்து காணாமற் போகும் தமிழர் தொகை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. காணாமற் போகும் தமிழர்களின் எண்ணிக்கை வடக்கு - கிழக்கில் மட்டு மல்ல கொழும்பிலும் அதிகரித்துவளது.

இலங்கை அரசாங்கம் ஏனைய தமிழ்க் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி விடுதலைப்புலிகளுக்கு எதிரான சண்டையைத் தீவிரப்படுத்தி வருகின்றது. இதுவே இலங்கையில் இன்றைய பொது நிலை வரமாகும்.

இந் நிலையில் குறிப்பிட்ட இளைஞர் மீது 1988 முதல் 1994 வரையிலான காலப் பகுதியில் கல்முனையில் ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான சித்திரவதைகளையும் மேற் கூறிய இன்றைய சூழலையும் கவனத்தில் எடுத்தால் கோணேஸ் அந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவது ஆபத்தானதாகும். அவர் அங்கு அனுப்பப்பட்டால் மேலும் சித்திரவதைக்கு உள்ளாவார்.

ஆகவே அவருக்கு முழு அகதி அந்தஸ்து வழங்க வேண்டுமெனத் தீர்ப்பளிக்கின்றேன். — என்று தெரிவித்துள்ளார்.

(ஐ-9)

# சமாதான நீதிவான்களின் பணி மக்கள் இடர் தணிப்பது அவசியம்

## பாராட்டு விழாவில் உரை

''எமது பிரதேசத்தில் இன்று உள்ள நிலைமையில் சமாதான நீதிவான்களின் பணி மிகவும் முக்கியமாகின்றது. எமது மக்களின் இடர்களைத் தணிப்பதில் சமாதான நீதிவான்களும் பெரும் பங்காற்ற வேண்டும்.''

இளைப்பாறிய அதிபரும் எழுத்தாளருமான புத்தொளி ந. சிவபாதம் இவ்வாறு கூறினார்.

சங்கரத்தையைச் சேர்ந்த திரு. நாகலிங்கம் ஜெயரஞ்சிதனுக்கு சமாதான நீதிவான் நியமனம் கிடைத்ததைப் பாராட்டி ஊர் மக்கள் நடத்திய விழாவில் உரையாற்றிய பொழுது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாராட்டுவிழா கடந்த மாதத்தில் சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயத்தில் சங்கரத்தை கிராம முன்னேற்றச் சங்கம் சமா... கு. சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி மேரி திரேஸா சிவலிங்கம்

எமது பாடசாலை ஆசிரியை

செல்வி சுசந்திராவின்

அன்புத்தாயார் திருமதி மேரி திரேஸா சிவலிங்கம் அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

செண். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை,

(51502) யாழ்ப்பாணம்.

# 60 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 27 — 05 — 1959



விண்ணில்: 30 — 09 — 1997

## அமரர் கதிரேசு நேதீஸ்வரன்

[அல்வாய் சுப்பிரமணிய வித்தியாசாலை, புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை, செங்குந்தா இந்துக் கல்லூரி பழைய மாணவன்.]

அன்புச் செல்வமே! நாங்கள் எதிர்பாராத வேளையில் அன்புச் செல்வங்களைத் தவிக்க விட்டு திடீரென நோய்வாய்ப்பட்டு இவ்வுலக வாழ்வை விட்டுச் சென்றாயே! உன் ஆத்ம சாந்திக்காக யாம் எல்லோரும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் துயருறும்:

தந்தை: பொன்னையா கதிரேசு,
(முன்னாள் மருந்துக்கடை முகாமையாளர் பருத்தித்துறை.)
மனைவி: சசிகலா,
மகள்: கிரிஷாந்தி,
சகோதரர்கள்: கனகேஸ்வரி, யோகேஸ்வரி, யோகேஸ்வரன்,
மருமக்கள், மைத்துனர்கள், சுற்றத்தார்.

22/7, புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (51500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ராகிங்'கிற்கு ஆதரவான செயற்பாடு மாணவரை மேலும் அந்நியமாக்கும்

## கொழும்பு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

கொழும்பு, டிச. 1

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் செ. வரப்பிரகாஷின் மரணம் அனைவராலும் கண்டிக்கப்படுவது நியாயமானதே. இவ்வாறான கண்டனக் கருத்துக்களை வெளிப்படுத்துவோருக்கு எதிராக மாணவர்கள் செயற்படுவது இன்றைய நிலையில் பல்கலைக்கழக மாணவர்களை மக்கள் மத்தியில் இருந்து மேலும் அந்நியப்படுத்தும் நடவடிக்கையாகவே அமையும்.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் ஒன்றியத்தின் தலைவர் புமெதா அத்துல்சிறி கையொப்பமிட்டு இந்த அறிக்கையை உதயனுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அறிக்கையின் விவரம் வருமாறு:-

ஆரம்ப காலங்களில் புதிய மாணவர்கள் சிரேஷ்ட மாணவர்களுடன் நட்பை வளர்க்கப் பயன்படுத்தப்பட்ட பகிடிவதை நாளடைவில் பல மாற்றங்கள் ஏற்பட்டாலும் பகிடிவதை உயிரைப் பறிக்குமளவுக்கு மாறியுள்ளதை அனைத்து சமூகங்களும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களும் எதிர்த்து குரல் எழுப்பின. வரப்பிரகாஷின் கொலையை எதிர்த்து கொழும்பு பல்பலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரான நாங்கள் ஒரு பகிஷ்கரிப்பையே நடத்தி இருந்தோம்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடந்த இக்கொடூர சம்பவத்திற்கு நாம் எதிர்ப்பைத் தெரிவித்தது வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள மூலம் வெளியாகியதன் மூலம் யாவரும் அறியக் கூடியதாக இருந்தது எமது பல்கலைக்கழகத்தில் உடல்ரீதியான வதைகள் நடைபெறாத போதும், நாம் பிற பல்கலைக்கழகங்களில் உடல் ரீதியான பகிடிவதைகள் நடப்பதை எதிர்த்து வருகின்றோம்.

பல்கலைக்கழகத்தில் சிறு தொகையினரே கல்வி கற்கின்ற போது- பல்கலைக் கழகத்தில் கல்விகற்கும் வாய்ப்புக் கிடைக்காமல் ஏங்கி இருக்கும் சமூகத்தினர் அதிகமாகக் காணப்படும்போது- பல்கலைக்கழகத்தில் ஏற்படும் சிறு தவறுகள் கூட பெரிதாக பிரசாரம் செய்கின்ற இக்காலகட்டத்தில் மிகவும் பாரதூரமான குற்றமான-உயிர்க் கொலையான - வரப்பிரகாஷின் மரணம் அனைவராலும் கண்டிக்கப்படுவது நியாயமானதே.

இப்படியான கருத்துக்களை வெளிப்படுத்துபவர்களுக்கு எதிராக நாம் செயற்படுவது இன்றைய நிலையில் பல்கலைக்கழக மாணவர்களை மக்கள் மத்தியில் இருந்து அந்நியப்படுத்தும் நடவடிக்கையாகவே அமையும்.

எனவே, நாம் அனைத்து பல்கலைக்கழகங்களையும் கொழும்பு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சார்பில் கேட்டுக் கொள்வது வரப்பிரகாஷின் கொலையின் பின்னர் வித்தியாசமான கண்ணோட்டத்தில் சமூகத்தினர் பார்த்துக் கொண்டிருக்கின்றவேளை மேலும் சமூகத்தில் பல்கலைக்கழக மாணவர்களை அந்நியப்படுத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டாம் என்றாகும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

# நவாலி நெல் வயல்களில் காவோலைப் புழு நோய்

யாழ்ப்பாணம், டிச. 1

நவாலி விவசாயிகள் சம்மேளனத்திற்குட்பட்ட பகுதியில் நெற்பயிரைத்தாக்கும் ''காவோலைப் புழு'' நோய் சில இடங்களில் பரவியுள்ளதாகத் தெரியவருகிறது.

எனவே இதற்குரிய களைநாசனிகளை கமநல கேந்திர நிலையங்களில் உடன் பெற்று விசிறுமாறு சம்மேளன செயலாளர் எஸ். ரமேஷ் விவசாயிகளை அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை பயிரை அழிக்கும் நண்டுத் தொல்லையை ஒழிக்க பியூராடான் மருந்தை உரத்துடன் கலந்து விசிறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# பருத்தித்துறையில் இருந்து பஸ் புறப்படும் நேரம் மாற்றம்

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கான கடைசி பஸ் சேவை ஆரம்பிக்கும் நேரம் நீடிக்கப்பட்டுள்ளது.

தினமும் பிற்பகல் 3-30 மணிக்கு யாழ்ப்பாணத்துக்கும் 3 மணிக்கு சாவகச்சேரிக்கும் பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு வந்த கடைசி பஸ் வண்டிகள் இன்று முதல் பிற்பகல் 4-15 மணிக்கு யாழ்ப்பாணத்துக்கும் சாவகச்சேரிக்கும் புறப்படும் என வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் உதயனுக்கு தெரிவித்தார்.

அரச ஊழியர்கள், பொதுமக்கள் விடுத்தகோரிக்கையையடுத்தே தினமும் நடைபெற்று வந்த கடைசி பஸ் வண்டிகளின் சேவை நேரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதேநேரம் இன்று முதல் சாவகச்சேரியிலிருந்து கொடிகாமம் ஊடாக சேவையிலீடுபடும் பஸ் வண்டி தினமும் காலை 7-05 மணிக்கு சாவகச்சேரியிலிருந்து பருத்தித்துறை நோக்கிப்புறப்படும்.

(ஐ-173)

# யுத்த அழுத்தங்களின் மத்தியிலும் கல்வியில் நாம் முன்னேறுகிறோம்

## பிரியாவிடை வைபவத்தில் உரை

செம்பியன்பற்று, டிச.1

யுத்த அழுத்தங்களில் இருந்து முழுமையாக எமது சமூகம் இன்னும் விடுபட முடியவில்லை. இத்தகைய நிலையிலும் எமது கல்விச் சமூகம் விழிப்பாகவும் உறுதியாகவும் இருந்து தடைகளைத் தாண்டி கல்விப் பாதையில் முன்னேறி வருகிறது.

மருதங்கேணி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வாராஜா இவ்வாறு தெரிவித்தார்.

மருதங்கேணிகல்விக் கோட்டத்தில் உள்ள ஆழியவளை சி.சி.த.க பாடசாலையின் அதிபர் து. இராஜரட்ணத்தின் பிரியாவிடை வைபவம் கடந்த 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் க. திரவியராசா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதிக் கல்விப்பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்கூறியதாவது:

இன்று கணனி மூலம் பல நாடுகளில் கல்விப்பணிகளும் போதனைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் நாங்கள் எங்கே நிற்கிறோம் என இவ்வேளையில் யாவரும் சிந்திப்பது அவசியம். யாழ். குடாநாட்டிலேயே இன்று மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் உள்ள ஆசிரியர்களும் அதிபர்களுமே மிகுந்த துன்பங்களையும் துயரங்களையும் எதிர்நோக்குகின்றனர். இங்கு போக்குவரத்து ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது போக்குவரத்துப் பிரச்சினையால் மாணவர்களே பாதிப்படைகின்றனர்.

எனினும் இங்குள்ள அதிபர்களும் ஆசிரியர்களும் கூடுதலாக கஷ்டப்பட்டு கற்பிப்பதால், மாணவர்கள் முன்னேற முடிகிறது இவ்வாறு கடமை தவறாத ஓர் அதிபருக்கு இன்று நாம் பிரியாவிடை விழா எடுப்பதில் தவறில்லை — என்றார்.

இவற்றைத் தொடர்ந்து கருத்துரை வழங்கிய உதவிக் கல்விப்பணிப்பாளர் த. இராஜலிங்கம் தெரிவித்ததாவது:-

ஒருபாடசாலையின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் காரணமாக இருப்பவர் அதிபரே. எனவே பாடசாலை வளர்ச்சி அடைவதில் அதிபர் அக்கறை செலுத்த வேண்டும்— என்றார்.

அம்பன் அ.மி.த. கலவன் பாடசாலை அதிபர் எஸ். ஸ்ரீஸ்கந்தராசா, மருதங்கேணி இந்து வித்தியாலய அதிபர், சா. அரியகுமார், உடுத்துறை மகா வித்தியாலய அதிபர் பொ. சங்கரப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்.

(ஐ-36)

## மைதானம் அமைக்க உதவி

சண்டிலிப்பாய், டிச .1

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கூடைப் பந்தாட்ட மைதானம் நிறுவுவதற்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 30 ஆயிரம்ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இதற்கென கல்லூரி பழைய மாணவர்களும் நிதி உதவி வழங்கியதை அடுத்து கூடைப்பந்தாட்ட மைதான அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

(ஐ-115)

## செய்திச் சாரம்

### பிரிவுபசாரம்

வரணி, டிச. 1

ஆழியவளை சி.சி.த.க. பாடசாலையில் கடந்த 10 வருடங்களாக அதிபராகப் பணியாற்றி அண்மையில் இளைப்பாறிய அதிபர் து. இராஜரட்ணத்துக்கு கடந்த 18 ஆம் திகதி சேவை நலன் பாராட்டு விழா நடைபெற்றது.

அன்றையதினம் காலை மருதங்கேணி கல்விக்கோட்ட அதிபர்களினால் செம்பியன் பற்று றோ.க.த.க. பாடசாலையில் வைத்து கௌரவிப்பு வைபவமும், மாலை ஆழியவளை சி.சி.த.க. பாடசாலையினால் பாடசாலை மண்டபத்தில் பிரிவுபசார வைபவமும் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை. செல்வராசா வாழ்த்துரை வழங்கினார்.

(ஐ-ரீ)

### பேராசிரியர் வித்தியானந்தன் நினைவு முத்திரை

வடமராட்சி, டிச. 1

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நினைவுப் பேருரையும் முத்திரை வெளியீடும் இம்மாத பிற்பகுதியில் புலோலியில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் இந்நினைவுப் பேருரையும், முத்திரை வெளியீடும் இடம்பெறும்.

(ஐ-173)

### சிறுவர்கள் காயம்

யாழ்ப்பாணம், டிச. 1

விளையாடிக் கொண்டிருந்த போது மதில் உடைந்து விழுந்ததால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் உள்ள வீட்டில் இச்சம்பவம் நடைபெற்றது.

தர்மலிங்கம் சுதாகரன் (வயது 9), தர்மலிங்கம் நந்தன் (வயது 15) ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

(ஐ-5)

### ஊனமுற்றோர் தின நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், டிச. 1

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு வலி. வடக்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் விளையாட்டுப்போட்டி, கலை நிகழ்ச்சி என்பன நாளை மறுதினம் (புதன்) பிற்பகல் 2 மணியளவில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம்போல் தலைமையில் நடைபெறும்.

விளையாட்டுப் போட்டிகளிலும், கலை நிகழ்ச்சிகளிலும் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு வைபவமும் அங்கு இடம்பெறும்

(ஐ-ரீ)

### விவேகானந்தர் வீடியோ படக்காட்சி

வடமராட்சி, டிச. 1

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நாளை மறுதினம் புதன் கிழமை சுவாமி ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் தொடர்பான வீடியோ படக்காட்சி காண்பிக்கப்படும்.

மாணவர்களுக்கென காட்டப்படும் இந்தவீடியோ படக்காட்சியை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஒழுங்கு செய்துள்ளது.

(ஐ-173)

## செய்திச் சாரம்

### அங்கவீனர்களின் விவரம் சேகரிப்பு

மல்லாகம், டிச. 1

யாழ். மாவட்டத்தில் உள்ள அங்கவீனர்கள் பற்றிய விவரங்களை வடக்கு-கிழக்கு மாகாணசபை சமூக சேவைத் திணைக்களம் கோரியுள்ளது.

தற்போது யாழ் மாவட்டத்தில் உள்ள அங்கவீனர்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அங்கவீனர் பற்றிய விவரங்கள் ஒவ்வொரு காலாண்டும் புதுப்பிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-86)

### துப்பாக்கி தவறுதலாக வெடித்தது

தென்மராட்சி, டிச. 1

வேலியுடன் சரித்து வைத்த துப்பாக்கி சரிந்து வீழ்ந்து வெடித்து சிப்பாய் ஒருவரின் காலை குண்டு துளைத்துச் சென்ற சம்பவம் கடந்த வாரம் பளை இத்தாவில் சந்தியில் இடம்பெற்றது.

துப்பாக்கி வேட்டினால் இப்பகுதியில் பதற்றம் ஏற்பட்ட போதிலும் சிறிது நேரத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

(ஐ-117)

### வாசிகசாலை இயங்குகிறது

வரணி, டிச. 1

நாகர்கோவில் தரவை சனசமூக நிலையத்தின் வாசிகசாலை தற்போது நிலையத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் வெண்மதி பாலர் பாடசாலை கட்டடத்தில் இயங்குகின்றது.

தரவை சனசமூக நிலையத்தின் வாசிகசாலை கொட்டகை பழுதடைந்ததைத் தொடர்ந்தே நூலகப்பிரிவு மாற்றப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

(ஐ-ரீ)

### பாடசாலை சிரமதானம்

செம்பியன்பற்று, டிச. 1

மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் உள்ள மாமுனை.அ.த.க பாடசாலை கடந்த 27 ஆம் திகதி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தாலும் பெற்றோர்களாலும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. அத்துடன் பாடசாலையின் சுற்றுப்புற வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

(ஐ-36)

### 13 ஆடுகள் மரணம்

செம்பியன்பற்று, டிச. 1

காட்டு மரவள்ளி குழை சாப்பிட்ட 13 ஆடுகள் உயிரிழந்தன

செம்பியன்பற்று தனிப்பனை என்னும் இடத்தைச் சேர்ந்த ஒருவரின் பட்டியில் உள்ள 13 ஆடுகளே கடந்த வாரம் மரணமடைந்தன.

(ஐ-36)

### மந்திகைக்கு மருந்து

மந்திகை மருத்துவமனைக்கு நான்காம்காலாண்டுக்கான மருந்து வகைகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வந்து சேர்ந்த மருந்துகளில், இரத்த அழுத்த நோயாளிகளுக்கான மருந்து மிகக் குறைந்தளவிலேயே உள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... நூலகம்.

# செம்பியன்பற்று வரை தட்டிவான் சேவை நடத்தக் கோரிக்கை

## கிராம முன்னேற்றச் சங்கம் மகஜர்

செம்பியன்பற்று, டிச.1

பருத்தித்துறையில் இருந்து வடமராட்சி கிழக்குக்கு தற்போது நடத்தப்பட்டு வரும் தட்டிவான் சேவையை நாகர் கோயிலில் இருந்து மாமுனை ஊடாக செம்பியன்பற்று வரை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

செம்பியன்பற்று கிராம முன்னேற்றச் சங்கம் வடமராட்சிசிற்றூர்திசங்கத்திற்கு அனுப்பிய மகஜரிலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரின் விவரம் வருமாறு:-

தங்கள் சங்கத்தில் இருந்து சிற்றூர்திசேவை ஒன்று பருத்தித்துறையில் இருந்து செம்பியன்பற்று வரை நடத்தப்பட்டு வந்துள்ளது. ஆனால் இச்சேவை இப்பொழுது நாகர் கோயில் வரையுமே நடத்தப்பட்டு வருகிறது.

குடாரப்பு, மாமுனை, செம்பியன்பற்று பகுதி மக்கள் தங்களது அன்றாடக் காரியங்கள் அனைத்திற்கும் பருத்தித் துறைக்கே வரவேண்டி உள்ளது, முக்கியமாக தமது உணவுப் பொருள்களை, வைத்திய சேவையைப் பெறுவதற்கு வேறு இடங்களிற்கு செல்ல முடியாது கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் இப்பகுதி மக்கள் கால்நடையாகவும், துவிச்சக்கரவண்டிகளிலும் தமது பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக இப்பகுதி மக்கள் சொல்லொணாத்துயரங்களை அனுபவிக்கின்றனர். ஆதலால் இப்பகுதி மக்களின் போக்குவரத்துவசதிக்காகப் பருத்தித்துறையில் இருந்து செம்பியன் பற்று வரையும் மனிதாபிமானமாக சேவையை நடத்துமாறு வேண்டிக் கொள்கிறோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-36)

# வடமராட்சிகிழக்கு மாணவருக்கு விசேட மீட்டல் வகுப்புகள்

## தென்னிந்தியத் திருச்சபை ஏற்பாடு

செம்பியன்பற்று டிச. 1

வடமராட்சி கிழக்கு குடத்தனையில் இலவச மீட்டல் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.

தென் இந்திய திருச்சபையினரால் டிசெம்பர் மாதம் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கே மீட்டல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்குவதில்லை. மாணவர்கள் முற்று முழுதாக பாடசாலைக் கல்வியிலேயே தங்கி உள்ளனர்.

இந்த நிலையில் தென்னிந்திய திருச்சபையினரின் முயற்சியை இப்பகுதி நலன் விரும்பிகளும் மக்களும் வரவேற்றுள்ளனர்.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கே மீட்டல் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

(ஐ-36)

# யுனிசெவ் உதவி

சண்டிலிப்பாய், டிச. 1

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் சில்லாலை சாந்தையிலும், ஆனைக் கோட்டை முள்ளியிலும் இயங்கும் இரு பாலர் பாடசாலைகளில் கட்டடம் அமைப்பதற்கும் மலசலகூடம் அமைப்பதற்கும் தலா 75 ஆயிரம் ரூபா நிதியை 'யுனிசெவ்' நிறுவனம் வழங்கியுள்ளது.'

ஏற்கனவே ''யுனிசெவ்' திட்டத்தின் கீழ் இப் பிரிவில் இரண்டு பாலர் பாடசாலைக் கட்டடங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-135)

# மருதங்கேணி மாணவருக்கு விளையாட்டு உபகரணங்கள்

செம்பியன்பற்று, டிச. 1

மருதங்கேணி கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு ''யுனிசெவ்'' நிறுவனம் விளையாட்டு உபகரணங்களை வழங்கி விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க முன் வந்துள்ளது.

மருதங்கேணி கல்விக் கோட்டத்தினதும், மருதங்கேணி பிரதேச செயலகத்தினதும் முயற்சியால் உதவிக்கல் விப்பணிப்பாளர் சிபார்சு செய்த பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட உள்ளன.

மருதங்கேணி இந்துவித்தியாலயம், தாளையடி றோ. க. பாடசாலை செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை, நாகர்கோயில் அ. மி. த. கலவன் பாடசாலை ஆகியனவற்றுக்கே உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

(ஐ-36)

# வெளிமாவட்ட ஆசிரியருக்கும் சம்பளம் வழங்கப்படுகிறது

அச்சுவேலி, டிச. 1

யாழ். மாவட்டத்தில் தற்காலிகமாக இணைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மீண்டும் சம்பளம் வழங்கப்படுகிறது.

வெளிமாவட்டங்களில் கடமையாற்றிய ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குத் திரும்பிச் செல்லமுடியாத நிலையில் யாழ். மாவட்டத்தில் தற்காலிகமாக இணைக்கப்பட்டனர்.

இணைக்கப்பட்ட திகதியில் இருந்து வழங்கப்பட்ட சம்பளம் கடந்த ஒக்ரோபர் மாதம் திடீரென நிறுத்தப்பட்டது.

அவர்கள் சொந்த மாவட்டத்திற்கு கடமைக்குத் திரும்புவதை வலியுறுத்தும நோக்கில் சம்பளம் இடைநிறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் நிறுத்தப்பட்ட சம்பளம் நவம்பர் மாதம் தொடக்கம் மீண்டும் வழங்கப்படுகின்றது.

தற்காலிக இணைப்பு பெற்ற ஆசிரியர்களுக்குவருட இறுதிவரை சம்பளம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

(ஐ)

# ரீ. வி, ரேடியோ விவரம் சேகரிப்பு

மல்லாகம், டிச. 1

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்களினால் தொலைக் காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள் மற்றும் வாகனங்களின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

மேற்படி விவரங்கள் நல்லூர்ப் பிரதேச செயலரின் பணிப்புரையை தொடர்ந்தே சேகரிக்கப்படுகின்றன.

(ஐ- 86)

# இன்று உலக எய்ட்ஸ் தினம்

இன்று உலக எய்ட்ஸ் தினமாகும். அதனை ஒட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

உலக 'எய்ட்ஸ' தினம். ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் 1ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த வருடம் அனுஷ்டிக்கப்படுவது பத்தாவது தினமாகும்.

உலக 'எய்ட்ஸ்' தின' என்றால் என்ன?

எய்ட்ஸ் பரவுதலை நிறுத்தும் உலகளாவிய முயற்சியினை விஸ்தரிக்கவும், பலப்படுத்தவும் நோக்கமாகக் கொண்டு அனுஷ்டிக்கப்படும் தினம் உலக எய்ட்ஸ் தினமாகும்.

அத்துடன் அதன் தொடர்புக்கான வழிகளை உருவாக்குவதும் தகவல் மற்றும் பரிமாற்றத்தின் பரிவர்த்தனையை ஊக்குவிப்பதும், சமூக ரீதியான சகிப்புத் தன்மை உணர்வினை உருவாக்குவதும் அதன் நோக்கங்களாகும்.

உலக எய்ட்ஸ் தினம் ஏச். ஐ. வி. தொற்று, மற்றும் எய்ட்ஸ் குறித்துப்பேச ஒருசந்தர்ப்பத்தினை வழங்குவதும், ஏச். ஐ.வி. தொற்றுதலும்மற்றும் எய்ட்ஸும் உள்ள மக்களைக் கவனிப்பதும், மற்றும் எய்ட்ஸ் பற்றி கற்பதுமாகும். ஆகவே உலக எய்ட்ஸ் தினமானது உலகளாவிய ரீதியில் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை கட்டி எழுப்ப உதவுகின்றது.

''எய்ட்ஸ்'' பரவாது தடுக்க மக்களிடம் விழிப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். ஆகவே எய்ட்ஸ் நோய் குறித்து அறிந்து கொள்வது மிக அவசியமாகும்.

★ எய்ட்ஸ் என்றால் என்ன?

A— ACCURED — பெறப்படுகின்ற (தொற்றின் மூலம்)
I — IMMUNE — எதிர்சக்தி
D — DIFICIENCY — குறைபாடு (காரணமாக ஏற்படும்)
S — SYNDROMES — பல நோய் அறிகுறிகள்

★ எக்கிருமியால் ஏற்படுகிறது?

H — HUMAN — மனித
I — IMMUNE DEFICIENCY— எதிர்சக்தி குறைபாடு
V — VIRUS — வைரசு

★ பிரச்சினையின் தாக்கம்:

வழக்கமாக ஏதாவது ஒரு வைரசு நம்மைப் பீடித்தால் உடலின் தற்காப்புச் சக்திப் பொறி முறையானது சுறுசுறுப்பாக இயங்கி வைரசுகளைத் தாக்கும். ஆனால் ஏச். ஐ வி. வைரசானது வெண் குருதிக் கலங்களில் உள்ள ஒரு தொகுதியான 'லிம்போஸைசற்ஸ்'யை தாக்கி அழிக்கிறபடியால் உடலின் பாதுகாப்புப் பொறிகள் செயலிழந்து நோயை எதிர்க்கும் சக்தியை இழந்து விடுவதால் ஏனைய தொற்று நோய்களால் தாக்கப்பட்டுச் சேதமுறும் நிலைக்கு அது தள்ளப்படுகின்றது.

★ 1981 இல் முதன் முதலாக இனங்காணப்பட்ட இந்நோய் 2000 ஆண்டில் 4 கோடி ஏச். ஐ. வி. தொற்று உடையவர்களையும் 2 கோடி எய்ட்ஸ் நோயாளர்களையும் பீடித்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

★ பாதிக்கப்படுபவர் அநேகமாக 15—40 வயது வரையானோர்.

★ இதற்கு தடுப்பு மருந்து இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

★ ஆசிய நாடுகளில், தனிநபர், குடும்பம், சமூகபொருளாதார ரீதியாக இதன் தாக்கம் கூடுதலாகக் காணப்படும்.

★ இந்நோயினால் குடும்ப சமூக அமைப்பு பாதிப்படைகின்றது.

★ நோய் தடுப்பிற்கு பெருமளவு பணம் செலவிட வேண்டிவரும்.

### இந்நோய் தொற்றும் முறைகள்

1. பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பு (ஆண், பெண் தன்னினச் சேர்க்கை)
2. எய்ட்ஸ் உடையவருடைய இரத்தம் இன்னொருவருக்கு ஏற்றும் போது
3. தடுப்பு மருந்து ஊசி, சத்திர சிகிச்சை உபகரணங்கள், சவரக்கத்தி, பச்சை குத்தலுக்கு பாவிக்கும் கருவிகள் சரிவர தொற்று நீக்கம் செய்யாமை.
4. தாயிலிருந்து பிள்ளைக்கு; பிரசவ, கர்ப்ப, பால் ஊட்டும் காலங்களில் (இது 25% அளவில்)

### முக்கிய அறிகுறிகள்

1. உடல் நிறை பத்து வீதத்திற்கும் அதிகமாகக் குறைதல்.
2. வயிற்றோட்டம் — ஒரு மாதத்திற்த மேல்.
3. காய்ச்சல்—தொடர்ந்து ஒரு மாதத்திற்கு மேல்
4. இருமல் — தொடர்ந்து ஒரு மாதத்திற்கு மேல்
5. இரவு வியர்த்தல்
6. களைப்பு
7. வாயின் உட்புறம் பங்கஸ் படலம்.
8. வீக்கமடைந்த நிணநீர்ச்சுரப்பிகள்.

### எய்ட்ஸ் தொற்றாத நடைமுறைகள்

★ சமூகத் தொடர்புகள்: கைகுலுக்குதல், அரவணைத்தல், முத்தமிடல்

★ உணவு, பானம் பகிர்ந்து கொள்ளல்; கோப்பை, கிண்ணம் ஒன்றாகப் பாவித்தல்.

★ இருமுதல், தும்முதல்.

★ ஆடை, துணி, துவாய், படுக்கை விரிபபு பாவித்தல்,

★ மலகூட ஆசனம், நீச்சல் தடாகம், பொது நீராடும் இடம்.

★ பூச்சி, நுளம்பு ஆகியவற்றின் கடி.

### தொற்றுப் பெறக்கூடிய இலக்கினர்

★ வெளிநாடு செல்வோர்

★ 15 - 40 வயதினரில் களியாட்ட விருப்புடையவர்கள்,

★ விபச்சாரிகள்

★ தன்னினச் சேர்க்கையாளர்

★ பலருடன் உடல் உறவு வைத்திருப்பவர்

★ ஊசி மூலம் போதை வஸ்து பாவிப்போர்.

### ஏச். ஐ. வி, தொற்று ஏற்பட்டால்

1. 65 வீதமானோர் நோய் காவிகளாக இருப்பார்கள் (Carriers)
2. 25-35 எய்ட்ஸ் போன்ற நோய்களுக்கு இலக்காவார்கள். உதாரணம்:- புற்று நோய் (Aid Related DIseases)
3. 5 - 10 வீதமானோர் எய்ட்ஸ் நோயினால் இறக்கிறார்கள்.

இதன் நோய் அரும்பும் காலம் (0-8 வருடங்கள் ஆகலாம்).

இதில் 2 வருடங்களில் 50 வீதமானோருக்கும், 3 வருடங்களில் 80 வீதமானோருக்கும், 5 வருடங்களில் 100வீதமானோருக்கும் நோய் தோன்றும் காலங்களாகும்.

இலங்கையை எடுத்துக் கொண்டால் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது எய்ட்ஸின் பாதிப்பு அவ்வளவு இல்லையாயினும் கீழ்காணும் காரணங்களால் தொற்றுஏற்பட இடமுண்டு.

★ வர்த்தக ரீதியில் நடக்கும் பாலுறவு. இதில் 12,000 பேர் ஈடுபட்டுள்ளார்கள்.

★ வெளிநாடு சென்று வருபவர்கள் (தொழிலாளர், பணிப்பெண்கள்)

★ சிறைச்சாலைக் கைதிகள்.

★ சுதந்திர வர்த்தக நிலையத்தில் வேலை செய்வோர். இதில் 75,000 பேர்கள் (ஆண், பெண்) வேலை செய்கிறார்கள்.

இரண்டாயிரமாம் நூற்றாண்டில், 80,000பேர் எச். ஐ வி. தொற்றுடையவர்களாக இருப்பார்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து. அரசாங்கம் ''தேசிய எய்ட்ஸ் குழு'' ஒன்று அமைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் இக்குழுவின் செயல்திறன் போதாது. எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த உத்வேகத்துடன் செயற்பட்டால் தான் இலங்கையில் எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

### தடுப்பு முறைகள்

★ பலருடன் பாலுறவு வைத்திருக்கலாகாது ஒருவனுக்குஒருத்தி என்ற ஒழுக்க விதியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

★ குருதி கொடுக்கும் பொழுது பரிசோதித்த பின் கொடுக்கவேண்டும்.

★ 'கொண்டோம்' பயன்படுத்த வேண்டும். (றப்பர் உறை)

★ ஓரினச் சேர்க்கையைத் தவிர்க்க வேண்டும்.

★ ஊசிகள், கருவிகள் நன்றாக கிருமி நீக்கம் செய்த பின் பாவிக்க வேண்டும்.

★ ஊசி மூலம் போதை வஸது பாவிப்பதை விலக்க வேண்டும்.

★ சுகாதாரக் கல்வி ஊட்டபபட வேண்டும். குறிப்பாக இளைஞர் யுவதிகள், பாடசாலை விட்டு விலகும் மாணவர்கள், மற்றும் பொது மக்கள் மத்தியில் எய்ட்ஸ் நோய் சம்பந்தமாக, நோயின் தன்மை, பரவும் வழி முறைகள, அதன் தாக்கங்கள் எப்படி தடை செய்யலாம் போன்ற அறிவை ஊட்ட வேண்டும்.

''நோய் வருமுன் காப்பதே சிறந்த வழி.''

க. மயில்வாகனம்

(பொதுச் சுகாதார பரிசோதகர், யாழ். மாநகரசபை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

200 - 6971, 16 - 8962 இலக்கமுடைய இரண்டு ஓட்டோ வாகனங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு; V. கிருஷ்ணபிள்ளை, காட்டு வளவு கந்தசாமி கோயிலடி, மீசாலை கிழக்கு, மீசாலை. [51486]

### தவறிவிட்டது

சிறிஸ்கந்தராஜா கெங்கா தேவி என்பவருடைய 605940331V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை யாழ். இந்துக்கல்லூரிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். 60/7, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். [51491]

### உடன் விற்பனை

கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ணா வீதியில் இராமகிருஷ்ணா பாடசாலைக்கு அருகில் 4½ பரப்புக் காணியுடன் 6 அறைகள் கொண்ட பெரியவீடு மற்றும் வீட்டுத்தளபாடங்கள், ரீ.வீ, டெக் ஜெனரேட்டர் உட்பட உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: சுரேஸ் கடை. கோண்டாவில் சந்தி, கோண்டாவில்கிழக்கு (பொ. மனோரஞ்சிதம், சந்திரன் கோண்டாவில் கிழக்கு). [51452]

பிறிமா புறோயிலர் குஞ்சுகள், பிறிமா பிறவுண், வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [51489]

### புலமைப்பரிசில்

புலமைப்பரிசில் 1998 பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள், விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond, யாழ்ப்பாணம். (51482)

## திருத்த வேலை

நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலய மணிக்கோபுர வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன் பூர்வாங்க நடவடிக்கையாக மணிக்கோபுரமணிகீழேஇறக்கிவைக்கப்பட்டுள்ளது. (ஐ-ரீ)


## வாடிக்கையாளர்களே!

() எம்மிடம் அழகுசாதனப்பொருள்கள்
() நூல் வகைகள்
() பட்டின்ஸ்
() லேஸ் வகைகள்
() புத்தம் புதிய கவரிங் நகைகள்
() (P) பேஸ் வகைகள்

ஆகியன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்:

## சிவராகினி ப(F)ன்சி குட்ஸ்

7 (74), பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்.
(கைலாசபிள்ளை மருந்துக்கடை அருகில்)
(51488)


## முக்கிய அறிவித்தல்

**தெல்லிப்பழை**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
(வரையறுள்ளது)
**1997 - 12 - 31 ஆம் திகதி**
**வாக்காளர் பட்டியல் பூர்த்தி செய்தல்**

1. 1992ஆம் ஆண்டு 11ஆம் இலக்க கூட்டுறவுத் திருத்த சட்டத்தின் பிரகாரம் 1996-12-21 ஆம் திகதிய பொதுக்கூட்டத்தில் எமது சங்க உபவிதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அங்கத்துவ பங்குப்பணம் ரூபா 100 ஆகும். இவ்விடயம் 1997-02-13 ஆம் திகதிய ''உதயன்'' பத்திரிகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதை நினைவுபடுத்திக் கொள்ளுகின்றோம்.
2. ரூபா 100 பங்குப்பணம் செலுத்தி ஒரு வருடம் பூர்த்தியான அங்கத்தவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெறும்.
3. சங்க உபவிதி திருத்தம் செய்யமுன் ரூபா 100 பங்குப் பணத்தைப் பூர்த்தி செய்யாத அங்கத்தவர்கள் 1997-12-31-க்கு முன் மிகுதிப் பணத்தைச் செலுத்தினால் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
4. உபவிதி மாற்றத்தின் பின் முறைப்படி பங்குப் பணம் செலுத்தாத உறுப்பினர்களதும், ஒரு வருடம் பூர்த்தி செய்யாதவர்களினதும் பெயர்கள வாக்காளர் பட்டியலில் இடம்பெற மாட்டாது.
5. மேலதிக விவரங்கள் பெறவிரும்புவோர் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

சி. முருகையா,
செயலாளர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.
1997-12-01.

(சி 2217)

# வீட்டின் ஓடு பிரித்து இறங்கி குசினிப் பாத்திரங்கள் திருட்டு

இரவு நேரத்தில் வீட்டின் குசினிக்குள் ஓடுகளைக் கழற்றி இறங்கிய திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்.

உரும்பிராய் வடக்குப்பகுதியில் உள்ள வீட்டில் கடந்த வியாழன் இரவு இச் சம்பவம் இடம் பெற்றது.

வீட்டிலுள்ளவர்கள் உறக்கத்தில் இருந்த வேளையில் சத்தமின்றி இவர்கள் செயற்பட்டுள்ளனர்.

பெறுமதி கூடியவையும், சுலபமாக எடுத்துச் செல்லக் கூடியவையுமான சிறிய குசினிப் பாவனைப் பொருள்களைத் தேர்ந்தெடுத்து திருடிச் சென்றுள்ளனர்.

(ஐ-154)

# சமாதான நீதிவான்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

புத்தொளி சிவபாதம் மேலும் பேசுகையில், ''ஜெயரஞ்சிதன் போன்ற ஒரு சிறந்த சமூக சேவகருக்கு சமாதான நீதிவான் நியமனம் கிடைத்தது பொருத்தமானதே ஆகும். இப்பதவி மூலம் அவர் குறிப்பாக இப்பிரதேசமக்களுக்கும், பொதுவாக யாழ்ப்பாண மக்களுக்கும் மேலும் சேவையாற்ற முடியும் என்று நான் முழுதாக நம்புகிறேன்'' என்று கூறினார்.

வலிகாமம் மேற்கு உதவி அரச அதிபர் திரு. கா. சந்திரராசா பேசுகையில் —

''ஜெயரஞ்சிதன் தன்னடக்கமும் பணிவும் அதேபோலத் துணிவும் புத்திசாதுரியமும் உடையதொரு மக்கள் சேவகன் ஆவார். அவர் எமது பிரதேசத்தில் பல்வேறு பொது நிறுவனங்களில் தலைமைப் பதவிகளை வகித்து சிறந்த சேவையாற்றி வருவதை நான் நன்கு அறிவேன். அவருடைய பணி மேலும் சிறப்படைய சமாதான நீதிவான் நியமனம் துணை புரிகிறது'' என்று அவர் கூறினார்.

பத்திரிகையாளர் திரு. வீ. சின்னத்தம்பி பாராட்டுரை வழங்கிய போது திரு. ஜெரஞ்சிதனின் சேவைகளைய எடுத்துக் கூறினார்.

டாக்டர் நா. இராஜதுரை ஆங்கிலத்தில் வாழ்த்துரை வழங்கினார்.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே. திரவியம், வட்டு. ஞானசம்பந்தர் வித்தியாலய அதிபர் வி. சிவஞானபோதன், சின்னம்மா வித்தியாலய அதிபர் வே. சிவானந்தன், யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பொருளாளர் தி. உதயசூரியன், க. மகேஸ்வரன், ம. சற்குணசிங்கம், செல்வி தி. நளாயினி, செல்வி சி. உசாதேவி முதலியோரும் பாராட்டுரை நிகழ்த்தினார்கள்.

பாராட்டு விழாவுக்கு முன்னர் விழா நாயகரும் அவருடைய பாரியார் திருமதி செல்வலட்சுமியும் சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்மன் கோயிலிலிருந்து மங்கள வாத்திய சகிதம் விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பாராட்டுவிழாவில் இணுவில் கோவிந்தசாமி புதல்வர் குழு, கானமூர்த்தி குழு ஆகியோரின் நாதஸ்வர இன்னிசைக் கச்சேரி இடம்பெற்றது.

இறுதியில் ஜெயரஞ்சிதன் பதிலுரை நிகழ்த்தினார்.

(ஐ)

**23 - 11 - 1997 இல் நடைபெற்ற**
## (6) புலமைப் பரிசில் - 1998
முதன்மைப் புள்ளி பெற்றவர்கள்

செல்வி பூர்ணிமா கதிரவேல் — 193 யா/சன்மார்க்க வித்.
செல்வன் பத்மயோகன் யோகராசா — 192 யா/பொஸ்கோ வித்.
செல்வன் முகிலன் காந்தரூபன் — 188 யா/உடுவில் ம. கல்.
செல்வன் யோகானந் சிவானந்தன் — 180 யா/இந்து ஆ. பா.
செல்வி வித்தியா பஞ்சரத்தினம் — 179 யா/சென். பெனடிக்ற் வித்.

**இவர்களை வாழ்த்துகிறோம்**


அடுத்த பரீட்சை: **07 - 12 - 1997** காலை 8 30 மணி
விவரங்களுக்கு:

பதிவாளர்,
**BOND - யாழ்ப்பாணம்.**
(51499)

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்



**கனகசபை சண்முகசுந்தரம்**
(உரிமையாளர், சிவன் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்.)
அன்னையின் மடியில்: **1941—11—03**



**சண்முகசுந்தரம் சிவரூபன்**
(யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி)
அன்னையின் மடியில்: **1983—08—18**

மறைவு: **1995—11—23**

**திதி: 01—12—1997**

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் திருவுருவாய், அன்பு நெறிகாட்டி எமை வாழவைத்த அன்புத்தெய்வமே! வாழவழி தெரியாமல் நிற்கின்றோம் உன்நினைவில். தனித்து நீர் செல்லாமல் மைந்தனையும் அழைத்துச் சென்றீரோ? ஆண்டு இரண்டுசென்றாலும் ஆறுவதில்லை ஐயா எம்மனம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதர, சகோதரிகள்,

செ. தனபாலசிங்கம்,
ஒட்டுமடம்.

(51397)

## மொழி பெயர்ப்பாளர்

மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

55 வயதுக்கு உட்பட்டவர்களும் ஆகக் குறைந்தது ஐந்து வருட கால மொழிபெயர்ப்பாளர் அனுபவம் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளில் இருந்தும் தமிழுக்கு, கருத்துத் தெளிவுடனும், பத்திரிகைக்கு உரிய நடையிலும் மொழி பெயர்ப்பதில் அனுபவம் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

பத்திரிகை அலுவலகங்களில் மொழிபெயர்ப்பாளர்களாகப் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு மொழி பெயர்ப்புச் செய்யும் திறமை உடையோர் விரும்பப் படுவர்.

இரவுப் பணியும் ஆற்றவேண்டும் என்பதால் விண்ணப்பதாரர்கள் யாழ். நகரப் பகுதியில் வசிக்க வேண்டும்.

கல்வித் தகுதி, தொழில் அனுபவம் உட்பட்ட சுய விவரங்கள் கொண்ட விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி **05—12—1997** ஆகும்.

பிரதம ஆசிரியர்,
**உதயன் - சஞ்சீவி,**
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## எய்ட்ஸ் தடுப்பு

இன்று டிசம்பர் முதலாம் திகதி உலக ''எய்ட்ஸ்'' நாளாகும்.

''எய்ட்ஸ் உள்ள உலகத்தில் வாழும் குழந்தைகள்'' என்பதே இவ்வருட எய்ட்ஸ் நாளின் தொனிப் பொருள். குழந்தைகள் எய்ட்ஸினால் பாதிக்கப்படுவதனைத் தடுக்க எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதே இத்தொனிப் பொருளை வகுத்ததன் நோக்கமாகும்.

இந்த ஒரு நாள் மட்டும் என்றிராது, எய்ட்ஸ் குறித்து விழிப்புணர்வை வருடம் முழுவதிலும் ஊட்டவேண்டிய தேவை இப்போது உலகளாவிய ரீதியில் தோன்றியுள்ளது.

கருவில் உள்ள சிசுவிலேயே எய்ட்ஸ் நோய் பாதிக்கும் அளவுக்கு அது பரவி வருகிறது. உலகத்தின் முதலாவது பயங்கர உயிர்க்கொல்லியாக அது தொற்றுகிறது.

21 ஆம் நூற்றாண்டுக்குள் பிரவேசிக்கும் போது உலகில் விஞ்ஞான முன்னேற்றத்தின் துரிதமான விளைவுகளை நவீன சகாப்தம் ஒன்றை உருவாக்கும் என்று உற்சாகத்துடன் எதிர்பார்க்கப்படும் அதே வேளையில் —

போரும் ஏனைய அழிவோடிணைந்த நிகழ்வுகளையும் எதிர்பார்க்காமல் இருக்க முடியவில்லை. எய்ட்ஸ் 2000 ஆம் ஆண்டுகளில் மக்களுக்கும் விஞ்ஞானத்துக்கும் பெரும் சவாலாக மாறும் என்று அஞ்சப்படுகிறது.

அப்போது இலங்கையில் 20,000 பேர் எச். ஐ. வி. வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களாக காவிகளாக இருப்பர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜூலை மாதம் வரை இலங்கையில் எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட 61 பேர் இறந்தனர். யாழ்ப்பாணத்திலும் இருவர் இந்நோயினால் மரணமானதாக உத்தியோகப் பற்றற்ற முறையில் தெரிவிக்கப்படுகின்றது.

இது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

இப்பகுதியைச் சேர்ந்தபெரும் எண்ணிக்கையானோர் இப்போது வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள். மத்திய கிழக்கு போன்ற பகுதிகளுக்குத் தொழில் பார்க்கச் சென்றவர்களும், மேற்கு நாடுகளுக்குச் சென்று நீண்ட காலமாகஇங்கு வருவதற்கு வாய்ப்பு இல்லாதிருந்தவர்களும் இப்போது யாழ்ப்பாணம் வந்து போகிறார்கள்.

இவர்களில் பத்துப் பேர் எச். ஐ. வி. காவிகளாக இருப்பின், எய்ட்ஸ் அபாயம் திடீரெனக் குடாநாட்டு மக்களைச் சூழ்ந்து கொண்டுவிடலாம். அத்தகைய ஒரு துரதிர்ஷ்ட நிலை ஏற்படாது பார்த்துக் கொள்வது அவசியம்.

போரினால் பல வகைகளிலும் ஏற்கனவே சீரழிந்து போயுள்ள குடாநாட்டு மக்களை, எய்ட்ஸ் அபாயமும் சூழ்ந்து கொள்ளுமாயின் அவர்களின் வாழ்க்கை நிலை மேலும் மோசமடையும்.

எய்ட்ஸ் நோய் பரவுவதற்கு தொற்று உண்டான இரத்தம் போன்றவையும் காரணிகளாக இருப்பினும், பாலியல் ஒழுக்கவீனங்கள் பிரதான காரணங்கள் என்பதனை மறந்துவிடக் கூடாது.

சமூக ஒழுக்க நெறிகள் நலிவடைந்து வரும் இன்றைய சூழ்நிலையில் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற பாரம்பரிய குடும்ப உறவின் பெறுமானம் பாதுகாக்கப்பட்டால், பேணப்பட்டால் எய்ட்ஸின் கொடுமையிலிருந்து தப்பலாம்.

# தீர்வுத் திட்டத்தின் குறைபாடே பிரபா அதை நிராகரிக்கக் காரணம்

## பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

மட்டக்களப்பு, டிச. 1

அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தின் குறைபாடுதான் விடுதலைப் புலிகள் தீர்வுத் திட்டத்தை நிராகரிக்க காரணம்.

தபால் தந்தி தொலைத் தொடர்புகள் தகவல் துறை பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரன் மாவீரர் தினச் செய்தியில் ''அரசின் தீர்வு யோசனை தமிழரின் அடிப்படையான தேசிய அபிலாஷைகள் எதனையும் தொட்டு நிற்கவில்லை'' எனக்குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து பிரதி அமைச்சரிடம் அபிப்பிராயம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளை நிராகரித்து விட்டு இனப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணமுடியாது. அது மட்டுமன்றி விடுதலைப் புலிகள் இன்றி சமாதானத்தை நிச்சயமாக ஏற்படுத்தவும் முடியாது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்றனர். தமிழர்களின் தீர்வுக்காக போராடுபவர்களாக விடுதலைப்புலிகள் உள்ளனர். இதனை அரசியல் தேவைகளுக்காக நிராகரிக்கவும் முடியாது.

விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என ஒதுக்கிவிடுவதால் சமாதானத்தை எட்டவும் முடியாது.

விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரன் சமாதானத்தை நிராகரித்து விட்டார் என்பதற்காக யுத்தத்தை தீர்வாகக் கொள்ள வேண்டுமென்று கருதவும் கூடாது.

தீர்வுத்திட்டத்தில் உள்ள குறைபாடுதான் நிராகரிக்கக் காரணம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

முதலில் விடுதலைப் புலிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளவேண்டும். பின்பு அவர்களின் இணக்கப்பாடு பெறவேண்டும் அப்படியில்லாமல் நமக்குள் பேசிவிட்டு ஏதோவொரு தீர்வை முன்வைப்பதால் எத்தகைய பயனும் கிடைக்கப்போவதில்லை.

விடுதலைப் புலிகளுடன் ஆலோசனை மட்டும் அன்றி இணக்கப்பாடு பெறுவதுதான் அவசியமானது.

விடுதலைப் புலிகளுடன் ஆலோசனைகளை மட்டும் மேற்கொண்டு அவர்களின் கருத்துக்களை கவனத்திற் கொள்ளாமல் அதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கக்கூடாது.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் இந்த மாபெரும் தவறை விட்டிருந்தது.

மாவீரர் தின உரையில் தீர்வுப்பொதி நிராகரிக்கப்பட்டமைக்காக அரசியல் தீர்வு முயற்சிகளைக் கைவிடாது வேறு ஒரு வகையில் விடுதலைப் புலிகள் சம்மதம் பெறும் வழிகளை நாடவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ 2)

## கலந்துரையாடல்

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தில் உயர் தொழில் ஆங்கிலம் 2 ஆம், 3 ஆம் வருடங்களில் பயின்ற மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் அமைந்துள்ள திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்தில் நடைபெற உள்ளது. இக் கலந்துரையாடலில் இறுதிப் பரீட்சைகள் பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்பட உள்ளதால் அனைத்து மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு பிராந்திய இயக்குநர் ச.ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார். (ஐ-9)

## சுருக்கெழுத்துப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், டிச. 1

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடன் பாடசாலைக் கல்வியை முடித்தோருக்கான ஒரு வருடகால தமிழ் சுருக்கெழுத்தாளர் பயிற்சி நெறியை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

ஜி. சீ. ஈ. சாதாரணதரத்தில் தமிழில் திறமைச் சித்தியும், கணிதம், ஆங்கிலம். ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் சாதாரண சித்தியும் பெற்ற இருபாலாரும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் ''செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம், வதிரி, கரவெட்டி'' என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரீ)

# கிரனேட் வெடிப்புகொலைவழக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைவிதிப்பு

யாழ்ப்பாணம், டிச. 1

மானிப்பாய், கட்டுடை கிரனேட் வெடிப்புக் கொலை வழக்கில் மல்லாகம் நீதிவான் மு. திருநாவுக்கரசால் எதிரிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த கதிரவேலு நித்தியானந்தராஜா என்பவர் கிரனேட்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்ய முயற்சித்ததாகவும் —

அயலவர்களான அருச்சுனன் சிவக்கொழுந்து (57 வயது), அருச்சுனன் சுசிலா (31 வயது) ஆகிய இருவரையும் கிரனேட்டை வெடிக்க வைத்து கொலை செய்ததாகவும் – குற்றம் சாட்டி சுன்னாகம் பொலீஸாரால் இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் இறந்த இருவரையும் கொல்லவேண்டும் என்ற எண்ணத்தோடு கிரனேட்டை வெடிக்க வைக்கவில்லை.

ஆனால், அவர் ஆபத்தான வெடிபொருளை வைத்திருந்தபடியால் அவருக்கு 5 வருடகாலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனையாக ஆறு மாதகால சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது என்று நீதிவான் தீர்ப்பு வழங்கி அவரை ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

இந்த வழக்கில் எதிரி சார்பில் சட்டத்தரணிகள் பொன். பூலோகசிங்கம், இ. ஜெயசிங்கம், கே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் ஆஜராகியிருந்தார்கள். (இ-3)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் அடிப்படைத் தரவுகள் சேகரிப்பு

செம்பியன்பற்று, டிச. 1

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி பிரதேச செயலகத்தால் சகல கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் அடிப்படைத் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

மாணவர் விவரம், குடும்ப விவரம், தொழில் விவரம், வர்த்தக–கைத்தொழில்துறை தொடர்பான விவரங்களே சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வேலை பூர்த்தியானதும் இத்தரவுகளை ஒன்று சேர்த்து மருதங்கேணி பிரதேச செயலகத்தால் நூல் ஒன்று வெளியிடப்படும் என்றும்இந்தவேலையைப் பூர்த்தியாக்குவதற்கான நிதி பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டில் இருந்து பெறப்படும் என்றும் மருதங்கேணி பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் க.ஈஸ்வரபாதம் தெரிவித்தார். (ஐ 36)

## மாணவர்ஒன்றுகூடல்

இந்த மாத முற்பகுதியில் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலையின் 11-ஆம் ஆண்டு மாணவர்கள் நாளை மறுதினம் புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் ஒன்று கூடல் வைபவமொன்றை நடத்தவுள்ளனர்.

# வவுனியாவின் உண்மை நிலையை கண்டறிய ஆணைக்குழு நியமிக்குக

## ராஜமனோகரி புலேந்திரன் கோருகிறார்

கொழும்பு, டிச. 1

''வவுனியாவில் இன்று என்ன நடக்கிறது என்பது பெரும் புதிராகவும் குழப்பமாகவும் இருக்கிறது. ஆயுதக் குழுக்கள் வவுனியாவை ஆட்டிப்படைக்கின்றன. வவுனியாவின் உண்மை நிலையைக் கண்டறிய அரசு நடுநிலையான ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்''

வன்னி மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ராஜமனோகரி புலேந்திரன் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியாவில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி தவிர்ந்த ஏனைய எல்லா அரசியல் கட்சிகளிடமும் ஆயுதங்கள் உள்ளன. அவைகளிடம் எவ்விதமான ஆயுதங்கள், எவ்வளவு ஆயுதங்கள் உள்ளன என்று எவருக்கும் தெரியாது. இந்தக் குழுக்களுக்கு ஒரு குறிப்பிட்ட சீருடை இல்லாவிடினும் அவை ஆயுதங்களோடு பகிரங்கமா[illegible]கின்றன. இதுவிடய[illegible] பொலீஸாரோ அல்லது இராணுவத்தினரோ எதுவித நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை. குறிப்பாக வவுனியா நகரத்துக்குள்தான் பல சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் அவதானிக்கையில் வவுனியாவின் பாதுகாப்பு ஒரு கேள்விக்குறியாகவே எனக்குத் தெரிகிறது.

இன்று வவுனியா நகரில் வியாபாரம் செய்வோர் இங்குள்ள ஆயுதக் குழுக்களுக்கு கட்டாயக் கமிஷன் கொடுக்க வேண்டியுள்ளது. ஒரு தேங்காய்க்கு இவ்வளவு காசு, ஒரு கிலோ வெங்காயத்துக்கு இவ்வளவு காசு என ஒவ்வொரு வியாபாரியும் தத்தமது உற்பத்திப் பொருள்களுக்கும், விற்பனைப் பொருள்களுக்கும் கமிஷன் வழங்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இதனை ஏன் பொலீஸார் தடை செய்யாமலிருக்கிறார்கள்? இவ்விடயத்தில் ஏன் அரசாங்கம் பாராமுகமாய் இருக்கின்றது?

வவுனியாவுக்குள் நுழைவோர் முதலில் நுழைவாயிலில் வைத்தே ''ஒரு நாள் [illegible] இதற்கு [illegible]மொழியில் 'பாஸ்' என்று சொல்லுகின்றார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை சிங்கப்பூர், மாலைதீவு போன்ற நாடுகளுக்குச் செல்வோர் பெறும் 'வீஸா' போன்றது என்றே இதனை வர்ணிப்பேன். நமது நாட்டிலிருந்து நமதுநாட்டின் ஒரு பகுதிக்குச் செல்வதற்கு இவ்வாறான 'வீஸா' அவசியமா? ஒரு நாளைக்குமேல் வவுனியாவில் தங்கி நிற்க வேண்டுமானால் இந்த ஒரு நாள் 'வீஸா'வைப் புதுப்பித்துக் கொண்டுதான் நிற்க வேண்டும் என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

வேறு பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக வவுனியாவுக்குள் ஆரம்பத்தில் நுழைந்தோர், நுழைவோர் ஏதோ நம்பிக்கைகளுடன்தான் வந்தார்கள்; வருகிறார்கள்.

ஆனால் இங்கு அவர்கள் நுழைந்த பின்னர் முகாம்களுக்குள் தள்ளப்படுகிறார்கள். இந்த முகாம்களுக்குள் இம்மக்கள் அனுபவிக்கும் வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல —

இப்படி அவர் கூறினார்.

(இ-21)

## மூவர் நியமனம்

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் நெற்பயிர்களுக்கும் ஏனைய மரக்கறிப்பயிர்களுக்கும் அழிவை ஏற்படுத்தும் கட்டாக்காலி ஆடு, மாடுகளைப் பிடிப்பதற்காக மூன்று பேரை நியமித்துள்ளது.

அண்மையில் இப் பகுதியில் பயிரழிவை ஏற்படுத்திய பசுமாடும் கன்றும் கால்நடை பிடிகாரர்களால் பிடிக்கப்பட்டதாக மேற்படி சம்மேளனத்தின் தலைவர் சி. பொ. ம. க. முதலியார் தெரிவித்தார். (ஐ-135)

## நாளை

**கார்த்திகை 17**

செவ்வாய்க்கிழமை

திதி: துதியை முற்பகல் 8.06 வரை.

நட்சத்திரம்: மூலம் பிற்பகல் 2.11 வரை.

சுபநேரம்: 12.15–1.45

ராகுகாலம் 7 45–9.15

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சித் தாவலைத் தடுக்கும் சட்டவிதிகள் ரத்தாகலாம்!

கொழும்பு, டிச. 1

கட்சி தாவலைத் தடுக்கும் சட்டவிதிகளை ரத்துச் செய்வது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசமைப்பின் 161 ஆவது (II) ஷரத்தின் கீழ் ஒரு கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மற்றொரு கட்சிக்கு தாவுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் யோசனையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முன்வரலாம் என்று கருதப்படுவதால் கட்சிதாவுவதைத் தடுக்கும் சட்ட விதிகளை ரத்துச் செய்ய அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அரசாங்கக் கட்சியினர் தமிழ்கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகக்கூறப்படுகிறது (இ-3)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அச்சமயம் அவர் ரிவோல்வரால் பொலீஸாரை நோக்கிச் சுட்டதாகவும்—

அதன்பின் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அந்த வீடியோ கடையில் நின்ற 4 வயதுடைய குகாதரன் கஜானன் கழுத்தில் சூடுபட்டு இறந்தார், இன்றுநடக்கும் ஒரு திருமண வைபவத்துக்காக அவர் நுவரெலியாவில் இருந்து அங்கு வந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா விபுலானந்த கல்லூரியின் 9 ஆம் ஆண்டு மாணவர்களான 14 வயது நிரம்பிய கணேஷ் விஜயராசா, கஜன் இராமச்சந்திரன் ஆகியோர் காயம் அடைந்தனர்.

இச்சம்பவத்தையடுத்து தேடுதல் நடத்திய சமயம் ஒருவரின் சடலத்தையும், கைக்குண்டு, ஒரு றிவோல்வர் ஆகியவற்றையும் கைப்பற்றியதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-164-3)


உள்ளூர், வெளியூர், வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளை

எந்நேரமும் யாழ். நகரில் பெறுவதற்கு

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(பக்ஸ் அனுப்பவும் வசதிகள் உண்டு)

(சி-2165)

யாழ்ப்பாணத்தில்

**அந்த ஆறு மாதங்கள்**

யாழ்ப்பாணத்தின் வரலாறு காணாத இடம் பெயர்வின் கதை

275 நாடகங்கள் எழுதிய

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

வீரகேசரியில் தொடராக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூல் யாழ். நகரில் எங்கும் கிடைக்கும்.

ரூபா 50/- (51494)

வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

**லைடனின் மலிவு விற்பனை**

காலம்:

**1-12-97 முதல் 31-12-97 வரை**

(சகல பொருள்களுக்கும் விசேட கழிவு உண்டு)

**லைடன் புடைவை நிலையம்**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2187)


## கண்ணீர் அஞ்சலி

எமது அதிபர்

அருட்திரு. போல் நட்சத்திரம் [அ.ம.தி]

அவர்களின் அருமைத்தாயார்

**திருமதி நேசம்மா மரியாம்பிள்ளை**

அவர்களின் மறைவையிட்டு

எம் கண்ணீர்க் காணிக்கைகள்!

தாயினைப் பிரிந்த சேயாயும்
சேனைகளின் தலைவனுமாய் - தம்
தாயாரின் பிரிவினால்
துவழும் வண்ணமிது - அவர்
பிள்ளைகள் நாமும் இதயமதில் கண்ணீர் சொரிய
செப்புகின்றோம் எமது கண்ணீர் அஞ்சலிகள்
அஞ்சலிகளுடன் அன்னாரின் ஆன்மா சாந்தி
அடைய இறைபாதம் இரந்து நிற்கும்:

ஆன்மீககுரு அருட்திரு. விஜயரெட்னம் (அ.ம.தி)

அருட் சகோதரன் பொன்ஜின் (அ ம.தி.)

அமலமரி தியாகிகள் சிறிய குருமட மாணவர்கள்.

(51508)

## தியேட்டர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டனர்.

அவர்கள் படம் முடிந்து வெளியே வந்து அடையாள அட்டைகளைப் பெறுமாறு கேட்கப்பட்டனர்.

இவ்வாறு அடையாள அட்டையைப் பெறச் சென்றவர்களில் ஆண், பெண்கள் உட்பட 50 பேர் மேல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். (இ 3)

## ஸ்ரேடியம்...

(முதலாம் பக்கத் தொடர்)

சபை மேற்கொண்டது. யாழ். நகர கொமாண்டரும் யாழ். நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு இணைப்பாளருமான பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் விளையாட்டுத் துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டு இந்த நிதி உதவி கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார்.

யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கத்தின் மேற்பார்வையில் துரையப்பா ஸ்ரேடியம் புனரமைப்புப் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது. (இ-3)

## பொன்னாலை...

(முதலாம் பக்கத் தொடர்)

சந்தி வரை சென்று அப்பயணிகளை ஏற்றிவரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த சில நாள்களுக்கு இந்த நடைமுறை பின்பற்றப்படும் எனத் தெரியவருகிறது.

பொன்னாலைப் பாலத்தை போக்குவரத்துக்காகத் திறக்கும் இன்றைய வைபவத்தில் இராணுவ மற்றும் கடற்படை உயரதிகாரிகள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீண்டகாலமாகப் போக்குவரத்து இன்றி சேதமடைந்திருந்த இப்பாலம் 50 லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

இப்பாலம் கடந்த தீபாவளி தினத்தன்று திறந்து வைக்கப்படவிருந்தது. பின்னர் அந்த வைபவம் ஒத்திவைக்கப்பட்டது.

பாலத்தை மீண்டும்போக்குவரத்துக்காகத் திறக்கமுயற்சி எடுத்த வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்லவுக்கும், வடபகுதி கடற்படைத் தளபதி சந்தகிரிக்கும் மற்றும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசிக்கும் ஈ. பி. டி. பி. அமைப்பு நன்றி தெரிவித்து கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது. (இ-ஐ)


## தேவை

இரும்பு வியாபாரத்தில் நன்கு அனுபவம் உள்ள நபர் தேவை! (வயது எல்லை 30 க்கு மேல்)

தொடர்பு:

55, 57, ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம்.

(51507)


# தேர்தலை சந்திக்கத் தயார் என்கிறது ஐக்கிய முன்னணி

ஐக்கிய முன்னணி தேர்தலுக்குத் தயார் என்றும் —

ஐக்கிய முன்னணிக் கட்சிகள் கூட்டாகத் தேர்தலைச் சந்திக்கும் என்றும் — ஐக்கிய முன்னணித் தலைவர்கள் நேற்று புதுடில்லியில் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தனர்.

அதே சமயம் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான வழிபற்றி குடியரசுத் தலைவர் கே. ஆர். நாராயணன் அரசியல் சாசன நிபுணர்களுடனும் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

நாராயணன் பாரதீய ஜனதாக் கட்சி மற்றும் அதன் தோழமைக் கட்சிகளின் தலைவர்களை நேற்று மாலை சந்தித்துப் பேசினார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் சந்தித்த குழுவில் எல். கே. அத்வானி உட்பட சிவசேனை, அகாலிதள், சமதா கட்சிகளின் தலைவர்களும் இருந்தனர்.

குடியரசுத் தலைவர் நேற்றுக்காலை காங்கிரஸ் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். மீண்டும் இன்றும் காங்கிரஸ் தலைவர்களை அவர் சந்திப்பார்.

ஐக்கிய முன்னணித் தலைவர்களை இன்று குடியரசுத் தலைவர் சந்திப்பார். (இ-31)

## மலையக மக்கள் முன்னணி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிச. 1

ஹட்டன் பொகவந்தலாவவில் நேற்று மலையக மக்கள் முன்னணியின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பிரதி அமைச்சர் பெ.சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 5000பேர் கலந்து கொண்டனர். (இ-21)

## ரூ.4 நாணய...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரிகேடியர் சுஸந்த மென்டிஸ் வட பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுடன் இந்த இணைப்பு மூலம் தொடர்பு கொண்டு இதனை ஆரம்பித்து வைத்தார்.

நாணயக்குற்றிகளைப் போட்டு தொலைபேசி இணைப்புப்பெறும் இத்தகைய எட்டுக் கருவிகள் எடுத்து வரப்பட்டுள்ளன என்றும் —

அவற்றில் ஒன்று வல்வெட்டித்துறையிலும், ஏனையவை யாழ். நகரப் பகுதியிலும் பொருத்தப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இரண்டு ரூபா குற்றியைப் போட்டு நகருக்குள் இணைப்பைப் பெறமுடியும்.

இரு இரண்டு ரூபா குற்றிகள் அல்லது நான்கு ஒரு ரூபா குற்றிகளைப் போட்டு நகருக்கு வெளியே, இலங்கைக்குள் இணைப்பைப் பெற முடியும்.

4 ரூபாவுடன் ஒரு நிமிடம் பேசமுடியும் என்றும்—

மேலும் 4 ரூபா பெறுமதியான குற்றிகளைப் போடுவதன் மூலம், ஒவ்வொரு 4 ரூபா குற்றிகளுக்கும் 50 செக்கண்டுகளுக்கு இணைப்புப் பெற்முடியும் என்றும்—தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## இந்தியப் பத்திரிகையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்)

விக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் அவர் தொடர்பு வைத்திருந்தார் எனப் பொலீஸார் குற்றஞ்சாட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மரியாம்பிள்ளை நேசம்மா

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ம. நேசம்மா 30 - 11 - 97 இல் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் திரு. சின்னப்பு மரியாம்பிள்ளையின் அன்புத் துணைவியாரும், திரு. பேரின்பநாதன், பத்திநாதன், அல்வீனம்மா (கொழும்பு), காலஞ்சென்ற சோதிநாதன் மற்றும் அமல உற்பவம் (இராமநாதபுரம்), அருள்தந்தை போல் நட்சத்திரம் அ.ம.தி., எலிசபெத் ஆகியோரது பாசமிகு தாயாரும், திருமதி தவமணி, தவமலர், கொர்னேலியுஸ் (கொழும்பு), இன்பராணி, குணசிங்கம் (இராமநாதபுரம்), லூயிஸ் மரியநாயகம் ஆகியோரது மாமியுமாவார்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் இன்று (1-12-97) திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு (புதிய நேரம்) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அருட்தந்தையர்கள், அருட்செல்விகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
அருள்தந்தை
ம. போல் நட்சத்திரக் அ.ம.தி.
புனித வளனார் அ.ம.தி.
குருமடம்,
கொழும்புத்துறை.

இவரது பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[51505]

### கந்தையா குகதாசன்

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடத்தைச் சேர்ந்த கந்தையா குகதாசன் 30-11-97 இல் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-12-97) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கரையாம்பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி
இராசையா அழகம்மா,
மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்.

(சி/2219)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org